# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No. 450/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw4/ Pw3 |
| Name | : Baskar |
| Father/Husband's Name | : Murugan |
| Village | : |
| Taluk | : Maraimalai Nagar |
| Calling | : |
| Age | : 30 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28.01.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தனியார் வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.05.2023 அன்று மறைமலைநகர் நகராட்சி அருகில் ஏற்பட்ட விபத்து தொடர்பாக போலீசார் வரைபடம் வரைந்து, விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அதற்கு நான் சாட்சியாக இருந்து, கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்துடன் கூடிய பார்வை மகசர் **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

வழக்கு சம்பந்தமாக என்னை காவல்நிலையம் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் 2023 ம் வருடம் எந்த வங்கியில் வேலை செய்தேன் என்றால் Axis bank ல் வேலை செய்தேன். தற்போது அங்கு வேலை செய்யவில்லை. நான் மேலாளராக வேலை செய்கிறேன். 2023ம் வருடத்தில் நான் வாடகை வீட்டில் தங்கியிருந்தேன். போலீசார் விசாரணையில் என்ன வேலையாக தாம்பரம் நோக்கி நான் சென்றேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னை விசாரிக்கும் போது, அங்கு

எவ்வளவு நபர்கள் இருந்தார்கள் என்றால் 10 நபர்கள் இருந்தார்கள். போலீசார் சொல்லி தான் நான் அந்த ஆவணத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு, என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் கையெழுத்து போட்டேன் என்றாலும் போலீசார் விபத்து நடந்ததாக என்னிடம் சொன்னார்கள். அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.